அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 09/2001

எனது இல : தாVIII/04/03(02)
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு,07
2001.05.21

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபை பிரதான செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின்
செயலாளர்கள் யாவர்க்கும்.

**1094/2 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை தொழிலியல் சேவை பிரமாணக் <u>குறிப்பை திருத்தம் செய்தல்.</u>**

2001.01.26 ஆந் திகதிய 04/2000 இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாக ற்றறிக்கையினால் திருத்தம் செய்த 1999.08.23 ஆந் திகதிய இலங்கைசனநாயக சோசலிசக் குடியரசின்1094/2 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையினால் பிரகடனப்படுத்திய இலங்கை தொழிலியல் சேவை பிரமாணக் குறிப்பை பின் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

02. 8.3 (ஆ) உபபந்திக்கு
அடுத்ததாக பின் தரப்பட்டுள்ள (இ),(ஈ),(உ) ஆகிய உபபந்திகளை உட்சேர்க்கப்படும்.

(இ) விசேட வகுப்பில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் எண்ணிக்கை 05 க்கு மேல் குறைந்தால் மேற்படி (அ) மற்றும் (ஆ) உபபந்திகளில் காட்டப்பட்டுள்ள நூற்றுவீதம் ஏற்புடையதாகாது. அலுவலர்களின் பணிமூப்பு, திறமை ஆகியவற்றின் பேரில் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும்

(ஈ) விசேட வகுப்பில் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 05 ஆகவோ அல்லது அதற்கு மேற்பட்டாலும் அந்த வருடத்தில் வெற்றிடமாகிய பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகவோ அல்லது அதற்கு குறைந்தால் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளை பெறும் அலுவலர்களின் பணிமூப்பு, திறமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்தல் வேண்டும்.

(உ) விசேட வகுப்பில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக வருடாந்தம் நடாத்தப்படும் போட்டி பரீட்சையில் பெறுபேறுகளை அந்த வருடத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாத்திரமே தொடர்புபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

03. 9.0 பந்தியில் 11 உபபந்தி

(1) 9.0 (11) உபபந்திக்கு பின் குறிப்பிடப்படும் குறிப்புகளை உட்சேர்க்கப்படும்.

குறிப்பு 1 :- 1994.07.01 ஆந் திகதியிலிருந்து 1999.08.23 ஆந் திகதி வரையிலான கால எல்லைக்குள் 45 வயது பூர்த்தியாகிய அலுவலரொருவர் அவ்வாறு 45 வயது பூர்த்தியாகிய திகதியிலிருந்து வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தும் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்,

குறிப்பு 2 :- 1994.07.01 திகதிக்கு முன்பு 45 வயது பூர்த்தியாகிய அலுவலரொருவருக்கு 1994.07.01 அந் திகதியிலிருந்து வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தும் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு 3 :- ஆயினும் திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்பை வெளியிடப்பட்ட 1999.08.23 ஆந் திகதியின் பின்பு 45 வயது பூர்த்தியாகியதன் பேரில் எந்தவொரு அலுவலரும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தும் தேவையிலிருந்து விலக்களிக்கப்படமாட்டார்.

(11) 9.0 (IV) உபபந்திக்கு பின் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பை உட்சேர்க்கப்படுகின்றது.

குறிப்பு ;- சேவையில் வகுப்பு 11 ''அ'' பிரிவின் அலுவலர்களுக்கு போலவே வகுப்பு 11 இன் ''ஆ'' பிரிவின் அலுவலர்களுக்கும் இரண்டாவது திணைக்கள பரீட்சைக்கு தோற்றுவதற்கு முடியும்.

04. 9.0 (V) ஆவது உபபந்தி

9.0 (V) உபபந்திக்கு பதிலாக பின் குறிப்பிடப்படும் உபபந்தியை பதிலீடு செய்யப்படுகின்றது. வகுப்பு 1 இல் இருந்து விசேட வகுப்புக்கு தரமுயர்வுகளுக்காக முகாமைத்துவம் உளச்சார்பு ஆகிய பாடங்களுக்கான இரண்டு வினாத்தாள்களை கொண்டிருக்கம் பரீட்சையொன்று சபையின் வழிகாட்டலின் கீழ் வருடாந்தம் பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படும். விசேட வகுப்பின் வெற்றிடங்களில் 40% ஐ நிரப்பப்படுவது மேற்படி பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்ற தகைமைகளை உடைய அலுவலர்களிடையே ஆகும். அவ்வாறாயினும் 2000 ஆம் ஆண்டும் அடங்கலாக 2020 ஆம் பஞ்சாங்க வருடத்தில் இறுதி வரை வருடாந்தம் விசேட தரத்தில் வெற்றிடங்களை பின் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நூற்று வீதத்திற்கு ஏற்ப நிரப்பப்படுதல் வேண்டும்.

| உரிய பரீட்சையில் சித்தியடைவதன் பேரில் | பணிமூப்பினதும் திறமையினதும் பேரில் |
|---|---|
| 20 | 80 |
| 21 | 79 |
| 22 | 78 |
| 23 | 77 |
| 24 | 76 |
| ↓ | ↓ |
| 40 | 60 |

2020.12.31 ஆந் திகதியின் பிறகு தொடர்ந்து பிரமாணக் குறிப்பில் 8.3 உபபந்தியில் காட்டப்பட்டுள்ள முறைக்கேற்ப விசேட தரத்தில் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும்.

05. 10.0 பந்தி

10.0 (1) உபபந்தியை (1) (அ) என மீண்டும் இலக்கமிடப்படுவதுடன், அடுத்ததாக 1 (ஆ), 1(இ) மற்றும் 1(ஈ) ஆகிய உபபந்திகளை புதிதாக உட்சேர்க்கப்படுகின்றது.

1. (ஆ) மத்தியமட்டத்திலான தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்பட்ட 1ஆவது மற்றும் 2ஆவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளில் சித்தியெய்த அலுவலர்கள் சேவையில் முதலாவது, இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளில் சித்தியெய்தியவர்களாக கருதப்படும்.

1. (இ) மத்திய மட்டத்திலான தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்பட்ட 2 ஆவது திணைக்கள பரீட்சையில் '' தாபன விதிக்கோவை'' பாடத்தில் சித்தியெய்த அலுவலர்கள் சேவையில் வகுப்பு 11 பிரிவு ''அ'' விற்குரிய 2 ஆவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் ''அலுவலக நிர்வாகம்'' மற்றும் ''தாபன விதிக்கோவை'' பாடத்தில் சித்தியெய்தும் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

1. (ஈ) மத்திய மட்டத்திலான தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்பட்ட 02 ஆவது திணைக்கள பரீட்சையில் ''நிதி ஒழுங்குவிதிகள்'' பாடத்தில் சித்தியெய்த அலுவலர் சேவையில் வகுப்பு 11 பகுதி ''அ'' விற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் ''நிதி ஒழுங்குவிதிகள்'' பாடத்தில் சித்தியெய்தும் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

மேற்படி திருத்தங்களுடன் கூறப்படும் திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்புக்கு நேரொத்தவாறு அந்தந்த பதவிகளில் ஆட்சேர்ப்பு விதிமுறைகளையும் திருத்தம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட நியமன அதிகாரியினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு